சேலம் மாவட்டம் ஆத்தூர் & சேலம் சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழக்குப் பணியாளர்,காவலர் மற்றும் பல்நோக்கு உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

சேலம் மாவட்டம் ஆத்தூர் & சேலம் சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழக்குப் பணியாளர், காவலர் மற்றும் பல்நோக்கு உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது :

சேலம் மாவட்டத்தில் குடும்பம் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தேவைப்படும் அவசரகால மீட்பு, மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, காவல் உதவி, சட்ட உதவி, தற்காலிக தங்குமிடம் ஆகியவற்றை வழங்கி அவர்களை பாதுகாக்க மத்திய அரசினால் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் சேலம் மாவட்டத்தில் சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையம் ஆகஸ்ட் 2018 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது சேலம் மாவட்டத்தில் உள்ள 2 (சேலம் ,ஆத்தூர்) சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் காலியாக உள்ள தற்காலிக பணியிடங்களை நிரப்புதல் பொருட்டு கீழ்க்கண்ட நிலைகளில் ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வழக்குப் பணியாளர் (Case Worker) (சேலம் –2 & ஆத்தூர் –3) பணியிடத்திற்கான கல்வித் தகுதி – BSW/MSW/Counselling Psychology சமூகப்பணி மற்றும் உளவியல் பாடப்பிரிவில் இளங்கலை /முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும், வயது வரம்பு 23 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும், தொகுப்பூதியம் ரூ. 18,800/– மற்றும் அதற்கான முன் அனுபவமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் அரசு / தனியார் நிறுவனங்களில் உளவியல் ஆலோசகராக 2 வருடபணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். 24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்.

காவலர் (Security Guard) (சேலம் –1 & ஆத்தூர் –1) பணியிடத்திற்கான கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பு அல்லது 12 ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும், வயது வரம்பு 21 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். தொகுப்பூதியம் ரூ. 12,000/- மற்றும் அதற்கான முன் அனுபவமாக அரசு/தனியார் அலுவலகத்தில் பணிபுரிந்த 2 வருட முன் அனுபவம் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் உள்ளூரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். 24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்.

பல்நோக்கு உதவியாளர் (MultiPurpose Helper) பணியிடம் (சேலம்–1) பணியிடத்திற்கான கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பு அல்லது 12 ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும், வயது வரம்பு 21 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். தொகுப்பூதியம் ரூ. 12,000/– மற்றும் அதற்கான முன் அனுபவமாக அரசு/தனியார் அலுவலகத்தில் பணிபுரிந்த 2 வருட முன் அனுபவம் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் உள்ளூரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். நன்கு சமையல் தெரிந்த பெண் சமையளராக இருக்க வேண்டும்,24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பிக்க விருப்பமுள்ள தகுதியான நபர்கள் www.salem.nic.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து விட்டு தங்களது சுய விபரங்களை **27.11.2026** அன்று மாலை **05.00** மணிக்குள் அறைஎண்.126, மாவட்ட சமூக நல அலுவலகம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியரக வளாகம், முதல்தளம், அறைஎண்.126 மாவட்ட சமூக நல அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ONE STOP CENTRE – SALEM
Application Form

Post Applied For		**Affix Recent Passport Size Photo**
Name of the Applicant with Initial		
Name of the Father/Spouse		
Age and DOB		
Residential Address		
District		
Mobile Number		
Education Qualification (10^{th},12^{th}, Degree/Provisional Certificate copy to be enclosed)		
Years of Experience (Experience Certificate to be enclosed)		
Police Verification Certificate		
Community Certificate		
Aadhaar Card Number		
Note* Applications not enclosed with above mentioned certificates shall strictly be rejected		

Date:

Place: **Signature of the Candidate**

குறிப்பு:

விண்ணப்பிக்கும்போது கீழ்க்கண்ட ஆவணங்களை தவறாமல் இணைக்க வேண்டும்.

1) விண்ணப்பம்
2) விண்ணப்பத்தில் பாஸ்போட் சைஸ் போட்டோ ஒட்டப்பட்டிருக்க வேண்டும்,
   முழுமையான முகவரி மற்றும் அலைபேசி எண் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
3) சுயசான்று ஒப்பமிட்ட (Self–Attested) சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். (Educational Qualification 10^{th},12^{th}, Degree Certificate/Additional Qualification/Experience Certificate/Community Certificate/ID Proof and Address Proof)
4) நேர்காணலில் போது அசல் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.